பிரமமே சத்தியம்
சத்தியமே நித்தியம்.

திருவாரூர்
ஞானசேகரம் ஸ்ரீஜத்
கிணகர் சுவாமிகள்
அருளிய

ஆத்மஞான
அமுதமொழிகள்.

மாயவரம்
மிராசுதார் க்ஷேம அச்சுக்கூடத்தில்,
அச்சிடப்பெற்று

திருவாரூர், ஜெயசிலன் பிரஸால்
வெளியிடப்பெற்றது.

பிர்மமே சத்தியம்.　　　சத்தியமே நித்தியம்.

ஆத்மஞான

அமுத மொழிகள்.

திருவாரூர்—விஜயபுரம்

வேதாந்த விசாரணைச் சங்கத்தலைவர்

அத்வைதகேசரி ஸ்ரீலஸ்ரீ

சௌந்திரராஜ பிர்மம்

அவர்களின் பிரதம சிஷ்யர்

ஞானசேகரம்

ஸ்ரீஜத். கிணகர் சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளியது.

உண்மை ஞானி என்பவர் யார்?

1. உண்மை ஞானிகளை "மெஞ்ஞானி" என்றும் உண்மைஞானமின்றி ஞானிபோல் நடிப்பவர்களை போலி ஞானிகளென்றும் சொல்லப்படும்.

2. ஞானமென்னும் உணர்ச்சி புழு முதல் மனிதராக உள்ள சர்வ ஜீவன்களுக்குமுண்டு. அவற்றுள் "பகுத்தறிவு" என்னும் மேலான உணர்வு மனித வர்க்கத்திற்கே உரியது.

3. இம்மானிட வர்க்கத்திலும் கடவுள் தன்மையுணர்ந்து அச்சொரூபமடைந்தவர்களே உண்மை ஞானி எனப்படுவர்.

4. கடவுளை சாஸ்திரங்களில் கடவுள், பிர்மம், சிவம், ஆத்மா, ஈசுவரன், கர்த்தா, சக்தி பிரதானம், புருஷன், இயற்கை, அருள், ஜோதி என அனேக பெயர்களால் கூறப்பட்டிருக்கிறது.

5. பெயர்உருவமாகியஉலகுக்கு ஆதாரமாகிய பஞ்சபூதத்தொகுதியை கற்பித்துக்கொண்ட சிதாபாசன் உண்மை ஞானமின்றியவர்களுக்கு பஞ்சபூதங்களாகவும் பஞ்சபூத மாற்று உருவங்களாகவும் தோற்றுகின்றது.

6. உண்மை ஞானியோ தன் சொரூபமாகிய ஆத்மாவிற்கு வேராக இப்பிரபஞ்சத்தை உணர்வதில்லை.

7. பல வித பேதத்தோற்றமாகப் புலப்படும் இவ்வுலகம் பேதமற்ற வியாபக பிர்மமாக எப்படியாகுமென்பது துவைதமார்க்கத்தாரின் கேள்வியாகும்.

8. இப்பிரபஞ்சத்தை கண் இந்திரிய வாயிலாக உணர்வது அறிவா? அல்லது வேறு ஏதாயினும் ஒன்றா? என்று யோசிக்கின் அறிவைத்தவிர வேறு எந்த உள் இந்திரியமும் காரணமாகாது என்பது அனுபவம்.

9. அந்த அறிவு உலகில் நாம் கற்பிக்கும் பஞ்ச பூதத்தில் எதைச்சேர்ந்தது என்று சொல்ல முடியாது.

10. அறிவுக்கு தனி சொரூபம் ஏற்பட்டிருக்கும் போது அந்த அறிவே சூட்சம இந்திரிய ஸ்தூல இந்திரிய வாயிலாய் உலகத்தின் உணர்வையடையும்போது அவ்வறிவல்லாது உலகம் எப்படி வேருக இருக்க முடியும் என்ற உண்மை தத்துவத்தை உணர்ந்தே அறிவிற்காதாரமாகிய அகண்ட ஸ்வரூபத்தை உண்மை ஞானி அடைந்துவிடுகிருன்.

11. தனது சொரூபத்தின் உண்மை இன்னதென அறிவிஞல் எப்போது உணரப்படுகிறதோ அப்போதே உண்மை ஞானத்தன்மை கைவல்யமாகிறது. அப்போதுதான் வேதத்தின் சித்தாந்தமாகிய அயம்ஆத்மா பிர்மம், பிரஞானம் பிர்மம், அகம் பிர்ம அஸ்மி என்னும் உண்மை நிலையினை அடைகிருன்.

12. ஞானியென்றும், யோகியென்றும் சொல்லிக்கொள்ளும் அநேக அறிஞர்கள் உலகத்தை வேராக உணர்ந்தும் இச்சரீரத்தை நீண்டகாலம் நிலைக்கச் செய்யக் கருதியும் பிராணயாமம் உந்தி முதல் பிர்மரந்திரம் வரை ரூப கற்பனைகளும் மானசதிருஷ்டியும், ஜோதி தரிசனை, சிரசில் அநேக ஓசைகளைக் கேட்குதல் முதலியவைகளினுலும் சரீரத்தை நீடித்து திடப்படுத்தும் மருந்து (காயகற்ப) முதலியவைகளினுலும் பெருமுயற்சி செய்து தன் வாழ்நாளை வீணுளாக்குகிருர்கள். அவர்களெல்லாம் உண்மை ஞானிகளாகமாட்டார்கள்.

13. உண்மை ஞானம் என்பது, உண்மைப் பொருளை அறிதல் எனப்படும் உண்மைப்பொருள் என்பது என்ன? பிர்மரந்தரத்தில் பிரகாசிக்கும் சுழி முனைப்பிரகாசம் அதாவது புருவ நடு மத்தியின் உட்பிரகாசம் உண்மையாகுமா? உண்மையாயின் சதா பிரகாசித்துக்கொண்டும் சுயம்பிரகாசமாகவுமிருக்கவேண்டுமே. அனுபவத்தில் அப்படியில்லையே. ஆராதாரங்களில் கற்பனையால் கணேசன், பிர்மா, விஷ்ணு, ருத்திரன், சதாசிவன், மகேசுரன் ஆகிய உருவங்களை சரீரத்தின் உட்பாகத்திலிருப்பதாக நினைத்து அன்னினைவிலேயே சுழுச்சி

அடைவது உண்மைப்பொருளாகுமா. பஞ்சேந்திரியங்களை அறிவில் நிலைக்கச்செய்து வெளி விஷயங்களை விட்டு நிஷ்டையிருப்பது போல இருப்பது உண்மைப்பொருளாகுமா? காயகல்பமென்று சில சித்தர்கள் சொல்வது போல் மூலிகை ரச சம்பந்தமுள்ள மருந்துகள் சாப்பிட்டு நோய்வாய்ப்படாதிருப்பதினாலும் சீதோஷ்ண ஸ்திதிகளை சமம் செய்து சரீரத்தை திடம் செய்து கொள்வதினாலும் ஜீவப்பிரம்ம ஐக்கிய வேதாந்த ரகசிய நூலிலும் வேதாந்த பாஸ்கரனென்ற நூலிலும் காயகல்பமென்பதை வெள்ளையாய் எழுத என் எழுதுகோல் நடுங்குகிறது என்றதினாலும் காணப்படும் அவரவர் மூத்திரம் முன்னே வருவதையும் பின்னே வருவதையும் தள்ளி இடையில் வருவதை குடித்து வருவதினாலும், செங்குருவை அரிசி சாப்பிட்ட மங்கையிடம் புணர்ந்து மங்கையின் சுரோணிதத்தை கும்பகபூரகம் செய்து சரீரத்தின் ஆண் குறி வாயிலாய் உட் தாதுக்களில் பரவச் செய்து சரீரம் திடப்படச்செய்வதினாலும் கபாலத்திலிருந்து, சுழும்முனை நாடி வாயிலாக வெளிவரும் விந்துவை முஷ்டிகாயோகத்தால் வெளிப்படுத்தி அதை சாப்பிடுவதினாலும் உண்மைப் பொருளை உணர்ந்ததாகுமா? லம்பிகாயோகத்தால் மூளையிலிருந்து ஒழுகும் சத்தை உள்நாக்கின் வாயிலாக பருகி சும்மாயிருப்பது உண்மைப்பொருளாகுமா? அவதூதராயும், கண்டபடி பேசிக்கொண்டும் நிராசையாயிருப்பதுதான் உண்மையாகுமா? பிராணவாயுவை கும்பித்து மூலாக்கினியை எழுப்பி அக்கினியுடன் வாயுவை சிரசில் நிருத்தி கஷ்டப்பட்டு மூளை கெட்டுப்போவது உண்மைப்பொருளாகுமா? சாயா தெரிசனை, இறந்தவர்களோடு சம்பாஷணை, தனது பிரதி சொரூபத்தை கண்ணாடியில் பார்த்துக்கொண்டே பழகி சித்தியடைவது உண்மைப் பொருளாகுமா? இயம, நியம, ஆசன, பிராணாயாம பிரத்தியாகார தியானசமாதி என்னும் பயிற்சியில் ஏற்படும் அணிமாதி சித்திகள் உண்மைப்பொருளாகுமா, பகுத்தறிவிற்கு புலப்படாத ஒன்றை கடவுள் என்று கட்டியழுவது பகுத்தறிவு அல்ல இயற்கையே சகலமும் என்று சொல்லும் பகுத்தறிவாளரின் வாசகம் உண்மைப்பொருளாகுமா? அன்போ அறிவோ சுயம்பிரகாச சொரூபமாகுமா?

14. இத்துணையும் உண்மை ஞானமல்ல. சர்வ உலக மனைத்திலும் தனது அகண்ட எதார்த்த சிதானந்தசக்தியை எப்பொழுது உணர்ந்தனுபவத்தை அடையப்படுகிறதோ அவ்வவஸ்தைதான் உண்மை ஞான நிலையாகும்.

15. சொற்பனத்தில் கண்டவையனைத்தும் பொய்யென்று விழிப்பிலுணர்ந்தவன் சொற்பனத்திலேற்பட்டதன் நிலையின் அனுபவங்களை மெய்யென்றுணர்வானோ? பிறகு எத்தனை சொற்பனங்கள் நிகழினும் உண்மை கண்ட உணர்வுக்கு சொற்பனம் சொற்பனமேயாகும்.

16. உண்மை ஞானிக்கு இப்பிரபஞ்ச தோற்ற நிகழ்வுகள் சகலமும் சொற்பனமேயாகும். தான் ஸ்தூல ஜடத்தில் பிரதிபிம்பிக்கும் அறிவிற்கு பிம்பமாகிய ஆத்மா அல்லது அதீத பிரக்ஞை என்று எப்பொழுது அவ்வவஸ்தையை அடைகிறானோ அப்பொழுது உண்மை ஞானியாகிறான். அவனுக்கன்னியமாக உணரப்படும் பொருளோ உணரப்படுபவனோ போன்ற துவைதமில்லை. ஸ்ரீ குருதெக்ஷணாமூர்த்தி ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளியபடி ஜகஜீவபரங்களின் கற்பனையை விடுத்து விடுத்த அறிவின் உணர்வாகிவிடுவதே உண்மை ஞானமாகும். ஆகவே கடலில் விழுந்தவனுக்கு கரைகாண தெப்பம் வாய்ப்பதுபோல் உண்மை ஞானமென்ற கடலில் விழுந்தபக்குவிகட்கு ஆத்மஞானமென்னும் கரையைக் காண அறிவிற்கு தெப்பம் போன்று உதவிபுரிந்து ஞானத்தின் கரையை சேர்ப்பிக்க தகுதியான சிறந்த தத்துவார்த்தம் நிறைந்த இந்த ஆத்ம ஞானமென்னும் அமுத மொழிகள் நிறைந்திலங்கும் இச்சிறிய நூலை எமது சிஷ்யர் கிணகர் சுவாமிகளென்னும் இளைஞரால் எழுதி வெளியிடப்பெற்றுள்ளது. உண்மை ஞானமடைய விருப்பமுற்ற பக்குவிகள் உணர்ந்து பயனடைவார்களா?

தலைவர்,

பொ. சவுந்தரராஜன்,

வேதாந்த விசாரணைச் சங்கம்,

விஜயபுரம், திருவாரூர்.

ஞானசேகரம்.

ஸ்ரீஜத். கிணகர் சுவாமிகள்

தமது ஞானசிரியர் அத்வைத கேசரி ஸ்ரீலஸ்ரீ

சௌந்திரராஜ பிர்மம்

அவர்கள் மீது இயற்றிய

சற்குரு வணக்கம்.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

முத்தியெனும் மோனநிலை யுணராது அவித்தையிலே
மூழ்கி மூழ்கி
சத்தியிலா உண்மையெனும் கறைகாணு தலமந்து
சலித்த வேளை
சத்தியத்தை விளக்கமுற யானுணர சைதன்ய
சாட்சாத் காரம்
நித்தியம் (ம) ற்றவைகளெலா மனித்தியமேன் றுபதேசம்
நிகழ்த்தி வைத்தோய்.

யாக்கையிலே சுத்தசுயம் பிரகாச லட்சணத்தை
எளிதில் சார்ந்து
வாழ்க்கையிலே அனுபவிய வழிகாட்டிப் பிறப்பிறப்பின்
வாதை நீக்கி
நீக்கமற தாளுக நிறைந்திலங்கும் நிட்களத்தில்
நிலைக்கச் செய்த
வாக்கினராம் சாதுசௌந்திரராஜ சற்குருவை
வணங்கி வாழ்வாம்.

1. தியானிப்பவன், தியானம் என்னும் இரண்டையும் விலக்கி தியானிக்கப்படும் வஸ்துவே தானென்று சந்தேகம் அற அனுபூதிவாயிலாக உணர்ந்தவன் எவனோ அவனே உண்மை ஞானி ஆகிறான்.

2. உண்மை ஞானப்பேற்றால் பந்தத்திற்கு காரணமான அஞ்ஞானம் நசித்துவிடுகிறது. பிறகு அஞ்ஞான உற்பத்தியில்லாது போய்விடுதலால் மோட்ச சொரூபம் சித்தித்துவிடுகிறது.

3. மனிதர்கள் உண்மையில் மோட்ச சொரூபம் அடையவேண்டுமானால் ஜனன மரணமென்னும் மிருத்தியுவை கடக்கவேண்டும். அப்படி ஜனன மரணமென்னும் மிருத்தியுவை கடக்கவேண்டுமானால் அவர் அவர்கள் தன் எதார்த்த சுயம்பிரகாச சொரூபத்தை இன்னதென்று விசாரித்து உணரும் தத்துவஞானத்தை கடைபிடித்தல் வேண்டும். அப்பொழுதுதான் மோக்ஷ சொரூபமாகலாம்.

4. நீ எப்பொழுதும் ஒருவனை பழைய பார்வையில் பார்க்காதே. ஏனெனில் மனிதனுடைய வாழ்க்கையில் மனோபாவனைகள் அனேகவிதமாக மாறுதலடையக்கூடும். இரண்டு வருஷத்திற்கு முன்பு நீ ஒருவனை தாழ்ந்த புத்தியுடையவனாகவும் கெட்ட கிர்த்தியம் செய்பவனாகவும் பார்த்திருக்கலாம். அதே மனிதன் இரண்டு வருஷத்திற்கு பின்பு உள்முகத்தில் தெளிந்த அறிவுள்ளவனாகவும் நிறைந்த ஞான சொரூபனாகவும் இருப்பன். அப்போது நீ உன் பழைய பார்வையோடு அவனை பார்ப்பாயாகில் அவ்வித பார்வையானது அசட்டுப்பார்வையாக முடியும்.

5. உண்மையாக தன்னுடைய எதார்த்த சொரூபத்தை உணர்ந்த தத்துவ ஞானிகளின் கூட்டுறவு எவ்விதமிருக்குமென்றால் கரும்பை நுனியிலிருந்து தின்பதையொத்திருக்கும். மற்றவர்களின் கூட்டுறவு எவ்விதமிருக்குமென்றாலோ கரும்பை அடியிலிருந்து தின்பதையொத்திருக்கும்.

6. ஆசைகளை அடக்குவதனால் ஒரு மனிதன் பரிசுத்த தன்மை வாய்ந்தவனென்று சொல்வதற்கில்லை. எப்படியெனில் ஒருவன் தன்னுடைய சுவாசத்தை சற்றுநேரம் அடக்கி வைத்திருப்பானாகில் அந்த சுவாசமானது இவன் அடக்கிய நிலையில் எவ்வளவு தடைபட்டிருந்ததோ அவ்வளவும் விட்ட நிலையில் வேகமாக வெளியாகிவிடும். அதுபோல் ஒரு மனிதன் ஆசைகளை அடக்கி வைத்திருப்பதனால் இல்லாது போய் விடாது. எப்பொழுதாவது ஒரு சமயம் விசிரிம்பித்தே தீரும் ஆகவே ஆசைகளை அடக்குவதென்பதையகற்றி, ஆசையின் நிலைமை எத்தகையது, இறுதியில் அவ்வாசையின் பயன் என்னவாகுமென்று கூர்ந்து புத்தியினால் விசாரித்து தெள்ளிய முறையில் உணர்ந்து விட்டுவிடுவதே உண்மையில் ஆசைகளை வென்றதாகும்.

7. எப்படி ஒரே மனிதன் மகனையும் பேரனையும் குறித்து தகப்பனும் பாட்டனும் ஆகின்றானோ அப்படியே அகண்ட சத்வஸ்துவே ஜீவனாகவும் ஈஸ்வரனாகவும் கற்பிதத்தில் தோற்றுகிறது.

8. எவன் பிர்மத்தை அறிகிறேன் அறியவில்லை யென்னும் விவகாரமிரண்டையும் விட்டு தான் அத்விதீய சைதன்ய வடிவமாத்திரமாக நிலைக்கின்றானோ அந்த புருஷனானவன் தான் பிர்மமேயாகின்றான்.

9. பிர்மஞானம் அடைய விருப்பமுற்றவன் சாஸ்திர மூலியமாகவோ குரு முகமாகவோ அப்யசித்து ஞானத்தின் உள் தத்துவத்தை அனுபூதி வாயிலாக உணர்ந்து கொண்டபின், நெல் தானியத்தை விரும்பியவன் பதரைத் தள்ளிவிடுவதுபோல் சாஸ்திரங்களை பிரட்டிப் பிரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் செய்கையை முழுவதும் விட்டுவிடவேண்டும்.

10. மனிதன் விழித்தாலொழிய தனது நித்திரையால் கற்பிக்கப்பட்ட சொற்பனம் நீங்காது. அதுபோல் ஒருவன் ஆத்மதத்துவத்தை உணர்ந்தாலன்றி அவனுக்கு அவ்வாத்ம தத்துவத்தை உணராததினால் கற்பிக்கப்பட்ட தன் ஜன்மாதி வடிவ சம்சாரபந்தம் நீங்காது.

11. மனிதனுடைய வாழ்க்கையில் ஒருவன் தனவந்தனாக வும் ஒருவன் ஏழையாகவும் எப்பொழுதும் இருத்தல் முடியாது. அப்படி ஒருவன் நாம் எப்பொழுதும் தனவந்தனாக இருந்துவிடுவோமென்று நினைப்பதும் அறியாமையாகும். ஏழை ஒருவன் நமக்கு இந்த ஏழ்மை நிலைமை எப்பொழுது மிருக்குமென்று நினைப்பதுவும் அபலைத்தனமாகும். ஜீவசிருஷ்டிக்கு காரியமாயுள்ள பஞ்சபூதப்பரிணாம பிரபஞ்சமே மூன்று மாதத்திற்கொருமுறை பிறட்சியடைகின்றது. எப்படியெனில் அதி யுத்கிருஷ்டமான வெய்யலின் கொடுமை மூன்று மாதத்திற்கும், வாயுவின் வேகம் மூன்று மாதத்திற்கும், மழை காலம் மூன்றுமாதத்திற்கும், பனிகாலம் மூன்றுமாதத்திற்கும் இப்படி வருஷத்திற்கு நான்கு விதமாக தவாது மாறிக் கொண்டே வருகிறது. இன்னும் சிற்சிலசமயங்களில் பூகம்பம் (பூமியாடுவது) புயற்காற்று, ஜலப்பிரளயம்போன்ற அமானுஷ்யச் செயல்களும் நிகழ்ந்துவிடுகிறது. பிரபஞ்சமே இப்படி மாருந்தன்மையடைந்துவிடுகிற பொழுது அதில் தோன்றிய ஜீவர்கள் எப்படி ஒரே நிலைமையில் இருத்தல்கூடும். ஆகையால் ஒருவன் மிகுந்த ஐஸ்வரியத்தோடு சுக ஜீவியாக வாழ்கிறேமென்று மமதை ததும்ப பிறரை இழிவாக நோக்கும் பார்வையும், ஒருவன் நாம் ஏழையாக இருக்கிறேமென்று உளத்தளர்ச்சியோடு தன்னையே இழிவாகவும் எண்ணும் துற்குணமும் கடுகளவும் இருத்தல் கூடாது. வாழ்க்கையிலேற்படும் சுகதுக்கங்களும் உயர்வு தாழ்வும் இயற்கையில் நிகழக்கூடியவைகளே என்று விவேகித்து உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

12. விழிப்பின் நிலைமையில் ஆத்மா, அதாவது சகலத்திற்கும் ஆதாரமாகிய சித்சக்தி, கர்மங்களெல்லாவற்றையும் செய்வதாக தோற்றப்படுகிறது. சொற்பனத்தில் ஆத்மா சூட்சும விருத்திகளில் பகிர்முகப்பட்டு சுகதுக்கங்களை போகிப்பது போல் காணப்படுகின்றது. நித்திரையில் ஆத்மா எல்லாம் ஒடுங்கி தமசாகிய அஞ்ஞானத்தில் சம்பந்தப்பட்டதாய் சுகரூபத்தை அடைகிறது. மேற்கண்ட மூன்றவஸ்தைகளிலும் எந்த வஸ்து பிரகாசிக்கச்செய்கின்றதோ அதுவே சகல விசித்ரமாகிய மனோமயமானஜகத்தையும் கற்பனையில்தோற்றச்

செய்விக்கிறது. ஜாக்ரம், சொற்பனம், நித்திரைமுதலிய பிரபஞ்சத்தை எது பிரகாசிக்கச் செய்கின்றதோ அந்த சுயம்பிரகாச வஸ்துவே நானாக இருக்கிறேனென்று நிதரிசனமாக அறிந்த ஞான சொரூபன் கிரகஸ்தாசிரமத்திலிருப்பினும்சரி, சன்யாச ஆசிரமத்திலிருப்பினும் சரி, பிர்மச்சாரியனாக இருப்பினும் சரி, வானப்பிரஸ்தனாயிருப்பிலும் சரி அவன் சர்வ பந்தங்களையும் கடந்து முக்த புருஷனாகிறான்.

13. பிர்ம சாட்சாத்காரத்தில் நிலைத்திருக்கும் சர்வக்ஞர்களாகிய ஞானிகள் சரீரத்தால் சர்வ கர்மங்களை செய்து கொண்டிருப்பினும் அக்கருமங்கள் கிஞ்சிற்றேனும் அவர்களை பந்திப்பதில்லை.

14. நீ ஞான நிஷ்டனாக வேண்டுமானால் எதிரியை எதிரி என்று கருதாதே, நண்பனை நண்பனென்று கருதாதே, தந்தையை தந்தையென்று கருதாதே, அன்னையை அன்னையென்று கருதாதே, புதல்வனை புதல்வனென்று கருதாதே, சுற்றத்தார்களை சுற்றத்தார்களாக கருதாதே, அவர்களுக்கெல்லாம் ஆதாரமாயுள்ள அகண்ட தெய்வீகத் தன்மையை மாத்திரம் அறிந்துகொள்.

15. வீட்டில் காவல் இல்லாதபோது தான் திருடர்கள் வந்து கதவை தந்திரமாக உடைத்தோ, அல்லது கன்னம் வைத்தோ உள்ளேசென்று பொருளை கவர்ந்து விடுவார்கள். ஆனால் எப்பொழுதும் பிரகாசத்தோடு எச்சரிக்கையாக இருப்பவன் வீட்டில் திருடர்கள் உள்ளே நுழைய துணிவதில்லை. அதுபோல் நீ உனது மனதில் ஞானமென்னும் பிரகாசத்தை எரியவிட்டு உலகை எதிர்நோக்கிக்கொண்டிரு. அப்பொழுது ஆசை, பாசம், பொறாமை, வஞ்சகம், மமதை, சமத்துவமின்மை முதலிய கொடிய கள்வர்கள் உன்னிடம் அணுக மாட்டார்கள். நீ லௌகிக வாழ்க்கையில் எவ்வளவு உழன்றபோதிலும் உன்னுடைய வாழ்க்கை நித்திய வாழ்க்கையாகவே இருக்கும்.

16. பசி தாக மிரண்டும் பிராணனுடைய தருமம். சோகம் மோகம் இரண்டும் மனத்தின் தருமம். கிழத்தன்மை மரணமாகும் தன்மை இரண்டும் சரீரத்தின் தருமம். அகண்டாகார பிர்மத்தி (கடவுளி) ற்கோ யாதொரு தர்மமுமில்லை.

17. ஒரு ஸ்திரீயே கணவனைக் குறித்து மனைவியாகவும், மாமனுரைக் குறித்து மருமகளாகவும், கொழுந்தனைக் குறித்து மதனியாகவும் வேறு வேருகக் காணப்படுகிருள். அந்த ஸ்திரீயை மனைவி மருமகள் மதனியென்றெல்லாம் நோக்கும் ஞானங்களே வேறு வேருக காணப்படுகின்றதேயல்லாது அந்த ஸ்திரீயின் ரூபத்தில் யாதொரு பேதமும் காணப்படுகிறதில்லை. அதுபோல் வியாபக பிர்மம் (கடவுள்) எப்பொழுதும் பேதத்தையடைகிறதில்லை. அவ்வஸ்துவை குறிக்கும் ஞானங்களே ஒன்று சிவனென்றும், ஒன்று ஷண்முகனென்றும், ஒன்று விஷ்ணுவென்றும், ஒன்று அல்லாவென்றும், ஒன்று ஏசுவென்றும், ஒன்று பிடாரியென்றும், ஒன்று காளியென்றும் பலவித பேதங்களாக வகுத்து மயக்கத்தால் எதார்த்த சொரூபத்தை கிட்டாது போய்விடுகிறது.

18. சித்திரம் எழுதுகிறவன் அழகாய் இல்லையென்று அவன் எழுதிய அலங்கிர்தமான சித்திரத்தை எறிந்துவிடுவது உண்டா? ஒரு ரோஜாமலர் முட்களுடன் கூடியிருக்கிறதே என்று அதை எறிந்து விடுவது உண்டா? தின்பண்டங்கள் செய்து தொழில் செய்கிறவன் அற்பமான உணவைக் கொண்டு ஜீவனம் செய்வதற்காக அவன் செய்யும் பலகார வகைகள் இனிமையாக இருந்தால் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதுண்டா? ஒருவன் அப் பலகாரங்களை வாங்கி உட்கொண்டால் பலகாரம் செய்கிறவன் தான் அற்பமான உணவைக் கொண்டு ஜீவனம் செய்கிருனேயென்று தின்பவனுக்கு அப் பலகாரங்கள் சுவை தாராது போவது உண்டா? ஆகவே நீ உன் வாழ் நாளில் உண்மையான ஞான சாட்சாத்காரம் அடையவேண்டுமானுல் உனக்கு உபதேசிக்கும் சற்குருவின் மொழிகள் தீட்சண்ய நிலையோடு கூடியதாயிருந்தால் ஏற்றுக் கொண்டு அதன்படி நடந்து நல்நிலையடைய முயற்சி செய். அதைவிடுத்து போதிப்பவன் எப்படிப்பட்டவன், அவன்

என்ன தொழில்செய்கிறுன், அவன் நிறைடபணம் உள்ளவனு அல்லது ஏழ்மை நிலையுடையவனு, அவன் கௌரவம் வாய்ந்தவனு அல்லது அகௌரவம் உள்ளவனு என்று அறியாமையினுல் வீணே ஆராய்ச்சி செய்யாதே.

19. எதுவரையில் ஒருவன் கரைசேரவில்லையோ அதுவரையில் அவன் கப்பலில் வரவேண்டியதுதான். ஆனுல் அவன் கரை சேர்ந்த பின் கப்பலால் அவனுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை. அது போல் ஒருவன் அபரோட்ச சாதன ஆத்மஞானமென்னும் கரையையடைவதற்கு சாஸ்திர விசாரணை என்ற கப்பல் அவசியம் தேவையே. ஆனுல் லட்சியார்த்த உண்மை ஞானமென்னும் கரையையடைந்த அனுபூதிகட்கோ சாஸ்திர விசாரணையென்ற கப்பல் அவசியமில்லாது போகிறது.

20. கடவுளை ஒரு மனிதன் சர்வகாலமும் புகழ்ந்தும் துதித்தும் வணங்கியும் காலத்தை கடத்துவானுனுல் அவன் ஜென்மமெடுத்ததின் பயனை அடைவதற்கு அருகதையற்றவனுகிவிடுகிறுன். எப்படியெனில் உதாரணமாக ஸ்ரீராமர் ஆஞ்சநேயருக்கு உபதேசம் செய்த உபனிஷத்தொன்றின் கருத்தை இங்கு நிரூபிக்கப்படுகிறது. ஸ்ரீராமன் யுத்தங்களெல்லாம் முடிந்து சீதையுடன் அயோத்திமாநகரை அடைந்துள்ள போது தினகாலமும் ஆஞ்சநேயமூர்த்தி ஸ்ரீராமனையும் சீதாபிராட்டியாரையும் சுற்றிவந்து ஆனந்தக்கண்ணீர் ததும்ப ஆடிப்பாடி பஜித்துக்கொண்டு வருவது வழக்கம். இப்படி இருக்க ஸ்ரீராமர் ஆஞ்சநேயருக்கு எதார்த்த உண்மை ஞான உபதேசம் செய்ய திருவுளம்பற்றி ஒருநாள் ஆஞ்சநேயர் சுற்றி ஆடிப்பாடி துதித்துக்கொண்டிருக்கும் சமயம் ஸ்ரீராமன் அநுமானை நோக்கி ஒரு விதமாக சிறித்தார். உடனே ஸ்ரீ ராமனை நோக்கி ஐயனே! இவ்வளவுகாலம் தங்களுக்கு செய்துகொண்டு வந்த பக்திக்கு ஆசீர்வதித்து வந்த தாங்கள் இன்று சிறித்தீர்களே! நானென்ன அவ்வளவு உள்ளன்பில்லாமல் துதி செய்யக்கூடியவனு? இதோபாருங்கள் உங்களிருவருடைய உருவத்தோற்றமும் என்மனதில் பதிந்து நிற்கிறதை என்று தன் மார்பை இரு கரங்களைக் கொண்டு

பிளந்து காண்பித்தார். அப்போது ஸ்ரீராமர் சீதை உருவத் தோற்றமிரண்டும் உள்ளே பிரகாசித்தது. உடனே ஸ்ரீ ராமன் ஆஞ்சநேயரை நோக்கி ஹே ஆஞ்சநேயா என்னை நீ இவ்வளவு காலம் எந்தவிதத்தில் பூஜித்து வந்தாயென்று கேட்டார். அதற்கு ஆஞ்சநேயர் ஐயனே என்ன இப்படி கேட்கின்றீர்கள். செந்தாமரை மலர்போன்ற வதனத்தையும் புஜபல பராக்கிரமமோடு கூடிய இரு கரங்களையும் சாமள சொரூபமாகிய திருஉருவத்தையும் கண்குளிர சேவை செய்து சர்வ காலமும் பூஜித்துக்கொண்டிருக்கின்றதை தேவரீர் அறியாததோ வென்ருர் உடனே ஸ்ரீராமர் சொல்லுகின்ருர் ஹே ஆஞ்சநேயா! நீ துதிக்கும் செந்தாமரை மலர்போன்ற வதனமும் புஜபல பராக்கிரமமோடு கூடிய இரு கரங்களும் சாமள சொரூபமாகிய இந்த சரீரமும் எப்பொழுதும் சாஸ்வதமாக இருக்கக் கூடியதல்லவே நீரிற் தோன்றும் குமிழிபோன்று அனித்தியமாக மறையும் தன்மையுடைய கற்பித நாமரூபமாயிற்றே அவ்வித கற்பித நாமரூபத்தை இவ்வளவுகாலம என் உண்மை ராம சொரூபமென்று பூஜித்து வருகின்றனையே என்று தான் நீ துதிக்கும் பொழுது சிரித்தேனென்று திருவாய் மலர்ந்தருளி மற்றும் அநேக பக்தர்கள் நீ பஜிக்கும் பாவனையிலே என் உண்மை சொரூப வியாபகத் தன்மையை உணர ஆற்றலற்றவர்களாய் என் கற்பித நாமரூபத்தை மெய்யென்று கண்டஸ்தானமாக பாவித்து பஜிப்பதும் பாடுவதும் ஆனந்தக் கூத்தாடுவதுமான பல அனித்திய உபாசனைகளை செய்து உண்மை ஞானமடையாது பக்தியிலேயே நின்றுவிடுகிருர்கள் என்று முடித்தார். உடனே ஆஞ்சநேயர் திடுக்கிட்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ஹே பிரபு நான் இவ்வளவு காலம் உங்கள் உருவத்தைக் குறித்தே உண்மையான ராமனென்று அறியாமையினுல் பூஜித்து வந்திருக்கிறேன். ஸ்ரீ ராமா உங்களுடைய உண்மையான ராம சொரூபத்தை இப்பொழுதே இந்த ஏழையென்க்கு உபதேசிக்க வேண்டுமாய் பிரார்த்திக்கிறேனென்ருர். பிறகு ஸ்ரீராமர் ஆஞ்சநேயருக்கு தன் உண்மை சொரூப லட்சணத்தை உபதேசம் செய்தருளினுர். ஆகையால் இதிலிருந்து ஞானவிருப்பமுடைய பக்குவிகள் அறிந்து கொள்ளவேண்டிய அம்சம் என்னவென்ருல் ஜடத்தன்மையோடுகூடிய நாமரூபங்களில் மனத்தை ஐக்கியம் செய்வ

தோடு மாத்திரம் நின்றுவிடாது, கடவுளின் உண்மை ஞான மடையமென்மேலும் விசாரணை வாயிலாக பிரயத்தனப்படு தலே மோட்ச சாதனமடைய வழியாகும்.

21. சரீரத்தின் மரணம் உண்மையான ஜீவசக்தியை அழிப்பதில்லை. ரூபத்தை மாத்திரம் நாசஞ் செய்கிறது.

22. கண்ணுடியானது மறைந்தவுடன் கண்ணுடியுள்ளி ருக்கும் பிரதிபிம்பம் தன்னுடைய வடிவபிம்பத்தினிடமாக லயமாவதுபோல் நித்திராவஸ்தையில் மனோ வியாபாரம் ஒடுங் கியவுடன் அதனிடத்துற்ற பிரதிபிம்ப ரூப ஜீவனும் தன் உண்மை அகண்ட சத்சொரூபத்தினிடமாக லயமாகிவிடு கிறது.

23. உபாசனை யோகம் இவைகளினுல் சித்தத்தை ஒரே நிலையில் நிருத்தலும் அணிமாதி சித்திகளும் அஷ்ட ஐஸ்வரி யங்களுமே அடையப்படுகின்றன. மற்றபடி உபாசனை யோகங்களினுல் உண்மை ஞானப்பேற்றை அடைகிறதில்லை. உபாசனை யோகங்கள் மனோ வியாபார ரூபமானதினுல் கரு மானுஷ்டானங்களேயல்லாது உண்மையானதல்ல. ஆகை யால் உண்மை ஞானம் ஆசார அனுஷ்டானுதி கருமங்களி னுல் உண்டாகிறதில்லை. விசாரணையினுலேயே உண்டாகிறது.

24. உண்மையில் நீ மனிதனென்பதே இல்லை. உன் உண்மை சொரூபம் அகண்ட சச்சிதானந்த சுயம்பிரகாச சொரூபமென்று ஊன்றி உணர். அப்பொழுதுதான் நீ ஜனன மெடுத்ததின் ரகசியம் வெளியாகின்றது.

25. ஒரு அரசன் தூக்கத்தில் தான் பிச்சைக்காரனுக இருப்பதாக கனுக்காணலாம். அப்படி கனவு காண்பதால் மாத்திரம் அவன்செலுத்தும் ராஜஆட்சி பங்கப்பட்டுவிடுமோ? அதுபோல ஹே! மனிதா நீ நித்திய சக்தி சொரூபியாக இருக்கிருய். அப்படி இருந்தும் அஞ்ஞானமென்ற சொற்பனு வஸ்தையில் ஆழ்ந்து ஞான விழிப்படையாது பந்தத்திற்கு அடிமையாகிவிடுகிருய்.

26. சூரியனது பிரகாசம் எங்கும் சமமாக இருப்பினும்பிரதி பிம்பம் எங்கும் உண்டாகிறதில்லை. எங்கே ஜலம் கண்ணுடி போன்ற வஸ்துக்களிருக்கின்றதோ அங்கே பிரதிபிம்ப ரூபமாக தோற்றுகிறது. அதுபோல் பிர்மம் (கடவுள்) எங்கும் வியாபகமாக இருப்பினும் எங்கு அந்தக்கரணமாகிய தோற்றமிருக்கின்றதோ அங்கே சிதாபாசரூபமாக அறிவின் மூல்யமாக விசேஷ சைதன்ய முண்டாகி பேசல், நடத்தல் இவைகளுக்கு நான் எஜமானன். இவைகளெல்லாம் சுகமாக அநுபவிக்கக்கூடியவன் நானேயென்று மாயா சம்பந்தத்தினுல் கண்ட அவஸ்தையில் தோற்றுகிறது.

27. மனிதன் ஒன்றை இச்சிக்கும் போது அதன் பிரயோஜனம் என்னவாகுமென்று சிறிது கூட ஆருய்ச்சி செய்வதில்லை. இறுதியில் எந்த நிலைமைக்கு அவ்வாசை கொண்டு போய் விடுமென்றும் ஞாபகிப்பதில்லை. பிறகு அவன் ஆசைகளின் பயன்களை அநுபவிக்கும்போது சுகமாக இருப்பின் குதூகலம் கொள்கிருன். துக்கமாக இருப்பின் அழுகிருன், புலம்புகிருன் இதுவெல்லாம் என் தலைவிதியென்று நொந்து கொள்கிருன். அவன் பிறந்தநக்ஷத்திரம் அல்லது லக்னத்தைக் குறிப்பிட்டுகசந்து கொள்கிருன். ஏன் இவன் இச்சைகளைக் கொள்ளும்போது அதன்கூடவே அவற்றின் பிரயோஜனங்களையும் யோசித்துக்கொள்ளலாகாது. இந்த சுகத்திற்கும் துக்கத்திற்கும் மூலகாரணம் அவனேயன்றி வேறெருவரும் அல்லர்.

28. ஓர் வீட்டினுள் தூணில் கட்டப்பட்டிருக்கும் ஒருவனுக்கு தெருக்கதவு திறந்திருப்பதினுல் யாதும் பிரயோஜனமில்லையோ அதுபோல் சிலர் ஆசாபாசங்களென்னும் கயிற்ருல் புத்தி மீராத நிலையில் உள்முகத்தில் கட்டுண்டு கிடக்க வெளி முகத்தில் மாத்திரம் பல பேர் கண்டு மயங்கும்படி கவச குண்டலாதிகள், உருத்திராட்ச ஆரங்கள், விபூதி பூச்சுகள், ஜெபமாலை யுருட்டுதல் போன்ற பல சின்னங்களிட்டுக் கொண்டு பிதற்றிக்கொண்டே ஜன்மமெடுத்ததின் தத்துவத்தை உணராது போய்விடுகின்றனர்.

29. சித்த சுத்தி எதுவரையில் ஒருவனுக்கு உண்டாக வில்லையோ அது பரியந்தம் அவன் கருமம் உபாசனை யோகம், ஜபம், தவம் முதலிய கிர்த்தியங்களை செய்ய வேண்டியவனாக இருக்கிறான். சித்த சுத்தி அடைந்த பின்னர் ஒருவன் கருமம், யோகம், உபாசனை, ஜபம் தவம் முதலிய கிர்த்தியங்களை செய்வானேயானால் அதனால் அவனுக்கு யாதொருவிதமான பிரயோஜனமும் சித்திக்கிறதில்லை. ஆகையால் சித்தசுத்தியடைந்த ஒருவன் மேற்கண்ட கரும உபாசனை முதலிய கிருத்தியங்களை யகற்றி பாமார்த்திக உண்மை ஞான சாட்சாத்காரனாக பிரயத்தனப்பட வேண்டியவனாக இருக்கிறான்.

30. ஒரு மனிதன் இரவு பனிரெண்டு மணிக்கு நான் நேற்றையதினம் அந்த தெருவிற்கு சென்றிருந்தேன் அங்கே எதுவும் தென்படவில்லை அந்த நடு ராத்திரி வேளையில் ஒரு மனிதனைக்கூட பார்க்கவில்லை என்று சொல்கிறான். அப்படி சொல்லும் அவனை நோக்கி ஏனையா அந்த நடு இரவில் நான் ஒரு மனிதனைக்கூட பார்க்கவில்லையென்று சொல்கிறாயே ஒரு மனிதன்கூட தென்படவில்லை என்று பார்த்துவந்த நீ யொருவன் இருக்கின்றாயே என்று கேட்டால் அவன் சொல்லியவை முழுவதும் பொய்மையாகிவிடுகிறது. பார்ப்பவன் ஒருவன் இருந்தால்தானே பார்த்தவைகள் உண்மையாகும். அதுபோல ஒருவன் ஆழ்ந்த நித்திரையிலிருந்தால் அவன் எழுந்த பிறகு என்ன இவ்வளவு நேரம் செய்தீரென்று கேட்டால் சொற்பன முதலிய எதையும் காணாது நான் நன்றாக நித்திரை செய்தேனென்று சொல்லுகிறான். அப்படி அவன் சொல்லுவது மெய்யானால் அதற்கொருவன் சாட்சியாக வர வேண்டியிருக்கிறது அல்லவா? நன்றாய் நித்திரை செய்தேன் சொற்பன முதலிய எதையும் காணவில்லையென்றால் காணக்கூடியவன் இருந்தால்தானே காணவில்லையென்று சொல்ல முடியும். காணக்கூடியவனும் இல்லையானால் காணவில்லை என்பதை எப்படி சொல்லக்கூடும். இதிலிருந்து தென்படுவது என்ன? ஹே மனிதனே! நன்றாக நித்திரை செய்யும்போது உனக்குள் ஏதோ ஒன்று விழித்துக்கொண்டிருக்கிறதென்பதை நிதரிசனமாக உணருகிறாயல்லவா. அதுவேதான் உண்

மையான உன் ஆத்ம சொரூபமாகும். பூரண அறிவு அது தான் அதனிடமிருந்துதான் பிரபஞ்சமெல்லாம் தோற்றுகிறது. அகண்டாகார அவ்வாத்ம சக்தியே இச்சரீரத்துள்ளிருக்கும் ஓர் இயந்திரத்தில் பிரதிபலித்து மற்ற இயந்திரங்களேயும் இயக்கத்தன்மையடையச் செய்து அதன் வாயிலாக அந்தக்கரண விர்த்திகள் தோன்றி அவ்விர்த்தி பகிர் முகப் பார்வையடையும் போது உன் உண்மை சொரூப எதார்த்த ஞானம் வழுவி அவ்விர்த்திரூபமே நானென்று மாய சம்பந்தமான மறைப்பினுல் மூடப்பட்டு மாறுந்தன்மையான லௌகீக வாழ்வில் தோன்றும் கற்பித அற்ப சுக துக்கங்களுடன் ஒன்றுகூடிய பாவனையில் நீ மனிதனென்ற பொய்ப்பெயரை யடைகிறுய்.

31. பிர்மமானது (கடவுளானது) இவ்வுலகத்திலாகிலும் வேறு உலகங்களிலாகிலும் குகைகளிலாகிலும் தீர்த்தங்களிலாகிலும் விசேஷமாக செய்யும் தர்ம கர்மங்களிலாகிலும் சாஸ்திரங்களிலாகிலும் தியானம் நிஷ்டை யோகம் முதலியவைகளிலாகிலும் இல்லை. விவேக வன்மையால் விசாரிக்குமளவில் அப்படி விசாரித்துப் பார்க்கிறவனுக்கு வேராக இல்லாமல் தானுகவே இருக்கிறது. எப்படியெனில் மடையனுன ஓர் இடையன் தன் தோளின்மீது ஆட்டை வைத்துக்கொண்டே ஆட்டைக் காணும் ஆட்டைக்காணுமென்று காட்டிலும் மேட்டிலும் தேடியலேவது போல நீயும் உன்னிடத்திலுள்ள அகண்ட ஆத்ம (கடவுள்) சொரூபத்தை உணர்ந்துகொள்ள முடியாமல் எந்த சாஸ்திரத்திலிருக்கிறதோவென்று மயங்குகிறுய்.

32. பயமற்ற சக்ரவர்த்தியாகிய மகாராஜா சொற்பனுவஸ்தையடைந்து பலவகையான துக்கத்தையும் பயத்தையும் அடைவான். சொற்பனத்தினின்று நினைவை அடைந்த மகாராஜா சொற்பன பயத்தை தன்பாலெண்ணமாட்டான். அது போல உண்மையாக மனிதன் சர்வ துக்கமற்றவனுக இருந்தும் தன் உண்மை ஆத்ம சொரூப லட்சணத்தை உணராத அஞ்ஞானத்தால் தன்னிடம் பலவகையான துன்பங்களை ஆரோபித்துக்கொள்கிறுன். தன் உண்மை ஆத்ம சாட்சாத்

காரமடைந்த அறிஞன் தன் தோற்றத்தில் சர்வ துக்கங்களை யும் பொய்யென்று கண்டுவிடுகிறான்.

33 பிர்ம ஞானத்தைப் புகட்டும் அத்வைத சாஸ்திரங்களை விசாரித்து நான் பிர்மமாக இருக்கிறேன் என்று எவன் உணரவில்லையோ அவன் கரிச்சுவையை அறியாத அகப்பையைப் போலாகிறான்.

34. பசுக்கள் அனேக நிறபேதங்களாக இருப்பினும் பால் ஒரு நிறமாகவே இருக்கும். பசுக்களிடத்தில் பாலைப் பார்ப்பது போல எவனொருவன் உலகில் தோன்றிய ஜீவர்கள் சரீரம் வேறு வேறாக பிரித்துப் பார்க்கக்கூடியவனாக இருப்பினும் அவைகளுக்கெல்லாம் ஆதார வஸ்து ஏக வியாபக சச்சிதானந்த பிர்மமேயென்று நிதரிசனமாக காணுகின்றானோ அவனே உண்மை ஞானியாகிறான்.

35. ஒருவனுக்கேற்படும் செல்வ மயக்கமானது சாராய மயக்கத்தைவிட அதிகமானதாகும். சாராயம் அருந்துபவன் சாராயம் அருந்துவதை அகற்றினால் மயக்கமில்லாது சஞ்சரிப்பான். செல்வ மயக்கமுள்ளவன் அவனடைந்த செல்வ முழுதையும் இழந்தாலல்லாது அச்செல்வத்தாலுண்டாகிய மயக்கம் அவனைவிட்டு விலகுகிறதில்லை.

36. தன்னையுணர்ந்த பிர்மஞானிகளாகிய ஜீவன்முக்த புருஷாகள் ஜல வடிவமான தீர்த்தங்களையும் கல் வடிவத்தாலும் மண் வடிவத்தாலும் சித்தரிக்கப்பட்ட தெய்வ சின்னங்களையும் வணங்குவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு எங்கும் பிர்ம தெரிசனமே பிரகாசிக்கும்.

37. ஒரு நாடகக்காரன் ஜனங்களை மகிழ்விக்கும் பொருட்டு பலவிதமான வேஷங்களை தரிப்பது போல் ஒருவன் அவன் சங்கற்பித்த நினைப்பின் பலனை அனுபவிக்கும்பொருட்டு பலவகையாகிய சரீரங்களை அடைகிறான்.

38. ஞானமென்பது என்னவென்றால் தன்னை உணர்வதாகும். அதாவது பிர்மம் தனது எதார்த்த சொரூபத்தை

காணுதலாகும். அந்த ஆத்மா (கடவுள்) ஒரு ரூபமுடையது அல்ல ஆதலின் இதுதான் கடவுள் என்று சுட்டிக் காட்ட முடியாதது. ஆனால் அருதியானது (வேதங்களானது) கடவுளல்லாத மற்றைய அனித்திய தோற்றப்பொருள்களை சுட்டிக்காட்டி இதுவல்ல இதுவல்லவென்று கூறிக் கொண்டே போய் முடிவாக எது மிச்சமாய் நீக்க முடியாததாய் இருக்கிறதோ அதுதான் ஆத்மா (கடவுள்) அதுதான் நீயென்று கூறுமேயன்றி இதுதான் ஆத்மா (கடவுள்) என்று காட்டுவதில்லை. காண்பதாகிய வஸ்துவொன்றும் காணப்படுவதாகிய வஸ்துவொன்றும் என்று இரண்டு வஸ்துக்கள் அவ்விடத்திலில்லை.

39. எட்டிப்பழமானது பார்வைக்கு மிகவும் அழகாக தோன்றுகிறது. ஆனால் அப்பழமானது உண்பதற்கு சிறிதேனும் உதவுவதில்லை. அதுபோல் உலகில் சிலர் ஆசாபாசங்களை அந்தரங்கமாக வைத்துக்கொண்டு வெளிப்பார்வைக்கு மட்டும் உலக விவகாரங்களை விடுத்து கடவுளின் அபரோட்ச ஞானமடைந்தவர்கள்போல் தோன்றுகிறார்கள். அது அவர்களின் பூர்வ ஜன்மக்குறைவாகும்.

40. காசி ராமேஸ்வரம் என்ற சில ஆலயங்களோடு சேர்ந்த தீர்த்தங்களில் ஒருவன் தூல சரீரத்தை மாத்திரம் நனைத்து அழுக்கை போக்கி ஸ்நானம் செய்துவிடுவதால் அவன் செய்த பாப கர்மங்கள் அவனை விட்டு அகன்று விடுவதாகவும் உடனே அவன் கடவுளின் பாதாரவிந்தங்களுக்கு அன்பனாகி மோட்சமடைந்து விடுவதாகவும் வெகு இலகுவில் எண்ணிவிடுகிறான். பாப கர்மங்கள் செய்யச் செய்விப்பது சரீரமா ? இல்லையே ஒருவன் மற்றொருவனை பலாத்காரமாக கொலை செய்விக்கவோ அல்லது நன்மை செய்விக்கவோ எண்ணுவது சூட்சமமாக உள்ள மனமே தவிர தூலமாகவுள்ள சரீரமல்லவே. ஜலத்தினால் நனைக்கப்படுவதற்கு அகப்படாத சூட்சமமாகவுள்ள மனம் நினைத்தாலல்லாது தசை நரம்பு தோல் முதலியவைகளால் ஆக்கப்பட்ட தூல சரீரத்திற்கு எவ்வித கர்மங்களையும் செய்வதற்கு சுயேச்சையாக சக்தி உண்டாகிறதில்லையே. இப்படி இருக்க ஸ்நானம் செய்விப்

பது மனத்தையா ? அல்லது தூல சரீரத்தையா ? ஜல ரூபமான தீர்த்தம், தூல ரூபமான சரீரத்திலுள்ள அழுக்கை போக்குமேயல்லாது ஜலத்தில் நனைப்பதற்கு இயலாத மனத்தினிடம் தோன்றும் ஆசாபாசங்களென்னும் பாப நினைப்பின் அழுக்கை நிவர்த்திப்பதில்லையே. ஆகவே மனத்தினிடமாகத் தோன்றும் ஆசாபாசங்களோடுகூடிய பாப நினைப்பின் அழுக்கை நிவர்த்திக்க வேண்டுமானல் வீண் பிரேமைகளெல்லாம் விட்டு தனது ஆத்ம சொரூபத்தை (கடவுளை) அனுபவ வாயிலாக உணர்ந்த ஞான சொரூபன் எங்கு இருக்கிறானென்று (தாகவிடாயுள்ளவன் ஜலத்தைத்தேடி செல்வது போல்) தேடி அவன் வசிக்குமிடம் குடிசையாக இருப்பினும் சரியே அந்த இடத்தை காசி ராமேஸ்வரம் போன்ற ஸ்தலத்திற்குமேல் ஆயிர மடங்கு விசேஷமானதும் புனிதமானதுமான ஸ்தலமென்று உள்ளன்போடு நினைத்து அந்த ஞான சொரூபனை தரிசித்து அவனிடம் உன் மனதிடமாக தோன்றி உன்னைக் கரைசேரவொட்டாமல் தடுக்கும் ஆசாபாசங்களோடு கூடிய பாப நினைப்பின் அழுக்கை விவரித்து சொல்வாயானல் அவன் ஞான போதனையாகிய தீர்த்தத்தை உன் மனதிடமாக படிந்துகிடக்கும் ஆசாபாசங்களோடு கூடிய பாப நினைப்பின்மேல் உபதேச வாயிலாக ஊற்றுவான். அப்பொழுதுதான் உன் பாப நினைப்பின் அழுக்குகளெல்லாம் கழுவப்படும். அதை விடுத்து காசி ராமேஸ்வரம் போன்ற ஜட வடிவமான ஆலயங்களோடு சார்ந்த ஜல வடிவமான தீர்த்தங்களில் உனது தூலவடிவமான தேகத்தை மாத்திரம் நனைத்துவிட்டால் சித்தத்திடமாக பதிந்து கிடக்கும் ஆசாபாசங்களோடு சார்ந்த பாப கர்மங்கள் தினையளவேனும் நசிக்கிறதில்லை.

41. மிருகமானது புறக்காரணங்களிடமே சுகத்தை வைத்துக்கொண்டிருக்கிறது. மனிதன் தன் புத்தியினிடமாக சுகஸ்தானத்தை வைத்துக்கொண்டிருக்கிறன். பிர்ம சாட்சாத்கார தெய்விக புருஷனே சகச நிஷ்டையிலேயே சுகமடைகிறன்.

42. எல்லாப்பிரவிகளிலும் மானிடப்பிறவியே அடைதற்கரியது. அதிலும் புருஷப் பிறவி வாய்ப்பதோ அதனிலு மரிது. புருஷனுகப் பிறந்தாலும் விவேகமுடையவனுக ஆருவது அதனிலும் அரிது. ஆகையால் பூர்வஜென்ம சங்கற்பவசத்தால் இம்மூன்றையும் அடைந்தவன் அதிவிரைவில் மோட்ச சொரூபமடைய முயலவேண்டும். இல்லையேல் இம்மூன்றும் பிரயோஜனமற்றதாக முடியும். சிலர் ஏனையா மனைவி மக்களின் சுகத்தை அனுபவிப்பது மனிதப் பிறவியின் பிரயோஜனமாகாதோ வென்று கேட்கலாம். மனைவி மக்கள் முதலானவர்களாலுண்டாகும் சுகம் இப்பிரபஞ்ச சிருஷ்டியில் தோன்றியுள்ள ஒவ்வொரு பிறவிக்குமுண்டு. விலங்கினங்களாகிய பசுபட்சியாதிகளும் மனைவி மக்களின் சுகத்தை அனுபவிக்கின்றன. ஆகையால் அந்த போகங்களுக்காக மனிதப்பிறவி அவசியமேயில்லை. விலங்கினங்களும் பசுபட்சிமுதல் கிருமிகீடாதிகளும் அடைதற்கு மிகவும் அருமையான மனிதப் பிறவியை எடுத்தும் அதிலும் புருஷ தத்துவத்தையும் பின்பு நன்மை தீமைகளையும் பிரித்து அறியும் அறிவையுமடைந்தும் இவைகளை உணராது கூழை விழுதை ஈன்ற ஆலமரத்தோடொக்கும். ஏழைமகளைப்பெற்ற நெஞ்சம் என்றபடி பிரபஞ்ச சுகத்தில் ஐக்கியமுள்ளவனுனல் அதமப்புருஷனென அவனுடைய ஜென்மம் நடைப்பிணமேயாகும். நாய், கழுதை, பன்றி முதலியவைகள் எப்பொழுதும் தின்றுகொண்டும் போகத்தை அனுபவித்துக்கொண்டும் சந்தோஷமாக திரிந்துகொண்டிருக்கின்றன. எந்தஜீவர்களுக்கும் அகப்படாத பகுத்தறியும் உணர்ச்சி ஏற்பட்ட மனிதனுகவுள்ள நீயும் அவைகளைப்போலவே உண்பதும் போகங்களை அனுபவிப்பதும் உறங்குவதுமாக காலத்தைகழிப்பாயேயாகில் அவைகளுக்கும் உனக்கும் பேதமென்ன ஒரு பேதமும் இல்லையே ஆகையால், ஓ மனிதனே வியாதியானது உன்னை பீடித்து வருத்துவதற்கு முன்னும் வயோதிக பருவமானது வந்தடைந்து நடுங்கச் செய்வதற்கு முன்னும் திடகாத்திரனுக இருக்கும் பொழுதே விரைவில் இந்த மனித ஜென்மம் எடுத்தது எதற்கு என்பதை நோக்கி ஜென்மமெடுத்ததற்கு முதற் பயனுகிய எதார்த்த சொரூப ஞானத்தையடைந்து சம்சார வாழ்க்கையிலிருந்துகொண்டே

சம்சாரபந்தத்திலிருந்து விடுபட்டு ஜீவன் முக்தனுக முயற்சிப்பாயாக.

43. சர்க்கரை தித்திக்குமென்று புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை வாசித்தமாத்திரத்தில் அந்த இனிப்பு நாவுக்கு ஏற்படுகிறதில்லை. சர்க்கரையை வாயில்போட்ட மாத்திரத்திலேயே அந்த தித்திப்பின் சுயானுபவம் உண்டாகிறது. அது போல் அசங்க வஸ்துவாகிய பிர்ம சொரூபமும் (கடவுள்) சொரூபமும், ஏக வியாபகமான பேரின்பமாகிய சர்க்கரை கட்டிதான் அதன் சுவை கண்டவர்க்கே தெரியும். ஆதலால் புஸ்தக வாசா ஞானத்தினுல் கடவுள் சுய சொரூபம் அடைதற்கியலாது.

44. எப்பொழுது யான் பிர்மமென்று எவன் எல்லாவற்றையும் அறிகிருனே அவன் சகல மாமிச பதார்த்தங்களை புசிக்கிறவனுக இருப்பினும், மாமிச பதார்த்தங்களை விற்கிறவனுக இருப்பினும் இயல்பாகவே இவ்வெல்லா கருமங்களையும் தன் ஞானுக்கினியினுல் நாசம் செய்கிருன். அதனுல் அவன் பாபமற்றவனுகிருன்.

45. ஒருவன் வாழ்க்கையில் ஆசாபாசங்கள் மொய்த்த ஆபாசமான தனது நினைப்புகளை மாற்றிக்கொள்ளாது சரீரத்தில் சார்ந்து ரத்தம், சீழ், மலம், கொழுப்பு இவைகளாக அப்போதைக்கப்போது மாறுதலடையும் உணவு பதார்த்தங்களில் மாமிச உணவை மாற்றி மரக்கறி உணவை புசித்துவிடுவதால் மாத்திரம் தான் பரிசுத்த சைவனென்றும் வீர சைவனென்றும், அவன், தான், கடவுளை அடைவதற்கு அருகதை உடையவனென்றும், மாமிச பதார்த்த முண்பவர்களெல்லாம் பாபமுடையவர்களென்றும் ஜீவகாருண்ய மற்றவர்களென்றும் வெகு இலகுவில் எண்ணிவிடுகிருன். மரக்கறி பதார்த்தம் புசிப்பவர் என்ன அனைவரும் துன்மார்க்கமின்றி சன்மார்க்கத்திலீடுபட்டவர்களாகவே இருக்கிருர்களா ? அல்லது மாம்ச பதார்த்தம் புசிப்பவர் அனைவர்களும் சன்மார்க்கமின்றி துன் மார்க்க செய்கையுடையவர்களாகவே இருக்கிருர்களா ? சன் மார்க்கமென்ருல் என்ன ? இரண்டு வகை பதார்த்தம் புசிப்

பவர்களிலும் கெட்ட கிர்த்தியம் செய்பவர்களும் சத்சங்கப் பழக்கமுள்ளவர்களும் அனுபவத்திலிருந்துகொண்டே தான் இருக்கிறார்கள். ஆகவே மாம்ச பதார்த்தமோ அல்லது மரக்கறி பதார்த்தமோ இவை இரண்டு வகையில் எதைப்புசிப்பினும் அனித்தியமான சரீரத்தில் சார்ந்து கழிவு பதார்த்தங்களாக வெளியாகி விடுகிறதே தவிர கடவுளை அடைவதற்கான சிறிய அம்சங்களிலாவது கொண்டுபோய் விடுகிறதில்லை. சிலர் மாமிச பதார்த்தம் உண்பதால் ராட்சச குணம் மரக்கறி பதார்த்தம் உண்பதால் சாத்வீக குணமும் உண்டாகிறது. அதனால்தான் மரக்கறி பதார்த்தம் உண்பது நன்மையென்று சொல்லுகிறார்கள். மரக்கறி பதார்த்தம் புசிப்பவர் ராட்சச குணமென்பதே அற்று சாத்வீக குணமே மேலிட்டவர்களாக இருக்கிறார்களா அல்லது மாமிச பதார்த்தம் உண்பவர் அனைவரும் சாத்வீக குணமே அற்று ராட்சச குணம் மேலிட்டவர்களாக இருக்கிறார்களா? இரண்டு வகை பதார்த்தம் புசிப்பவர்களிலும் ராட்சச குணம் மேலிட்டவர்களும், சாத்வீக குணம் மேலிட்டவர்களும் நிரந்தரமாக காணப்படுகின்றார்கள். உதாரணமாக குரங்கு மாமிச உணவையோ உட்கொள்ளுவதில்லை. அப்படியிருந்தும் அதன் துஷ்ட செய்கையாகிய ராட்சச குணம் மாறுவதில்லை. இன்னும் சிலர் மாமிச பதார்த்தம் புசிப்பது ஜீவவதை செய்வதாகும் ஆகையால் மரக்கறி பதார்த்தமே பாபமற்ற உணவாகும். அதை உண்பதே விசேஷமென்று சொல்லுகிறார்கள். இவர்கள் கொள்கைப்படிக்கு ஜீவனென்பது எது ? உயிரா ? உடலா ? இந்திரியங்களா? மனமா? புத்தியா? சித்தமா அறிவா அல்லது எல்லாம் சேர்ந்த தொகுதிக்கு ஜீவனென்பதா ? உதாரணமாக விரோசனனென்ற அசுர அரசனும் இந்திரனும் உண்மையான (கடவுள்) ஆத்ம ஞானத்தை அடைதற்கு விரும்பி ஒரு பிர்ம ஞானியிடம் சென்று சுவாமி கடவுள் என்பது எது அதை எங்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்று கேட்டார்கள் அதற்கு பிர்ம ஞானியானவர் குழந்தைகளே எதிரிலிருக்கும் ஜலம் நிறைந்த குடத்தில் போய் பாருங்கள் அதில் என்ன தெரிகிறதோ அதுவே கடவுள் என்று சொன்னார். உடனே இருவரும் குடத்தை போய் பார்த்தார்கள். அதில் அவரவர்கள் உருவத்தோற்றமே பிரதிபிம்பித்தது. இந்திரன் பார்த்

தான் உடனே விவேகித்து சரீரம் எப்படி கடவுளாகும் என்று குருவை அடுத்து உண்மையான ஞானதிசையடைந்தான். விரோசனன் என்னசெய்தானென்றால் பரம சந்தோஷமடைந்து ஆனந்தக்கூத்தாடினான். கடவுளை கண்டு கொண்டேன். குரு சொல்லியபடி தனது சரீரமே கடவுள் என்று எண்ணினான். தனது ராஜ்ஜியம் சென்றான் பிரஜைகளே நான் ஞான திசையடைந்துவந்துள்ளேன் நான் அதை உங்களுக்குச் சொல்லுகின்றேன் அதுவே உண்மை மற்றவை எல்லாம் பொய் ஆகவே நான் சொல்லும் ஞானத்தையே பின்பற்றுங்கள். பின்பற்றினால் மோட்சம் வெகு விரைவில் அடையலாம். அதாவது நமது சரீரமே மெய்யான கடவுளாகும். சரீரத்திற்கு நல்ல ஆடையாபரணங்களும் அருசுவையான உணவுபதார்த்தங்களையும் கொடுத்து அது போனபோக்கில் போகபோக்கியங்களை அனுபவிக்கச் செய்வதே ஜீவன் முக்தியென்று பிரகடனம் செய்து தானும் அவ்வழியிலேயே முற்பட்டான். விரோசனன் எப்படி ஸ்தூல புத்தியினால் கடவுளின் (தனது) உண்மை தன்மையை உணராது சரீரமே கடவுள் என்று நினைத்து அபலையானானோ அதுபோல் சைவத்தின் உண்மை நிலையையும் ஜீவகாருண்யத்தின் உண்மை தத்துவத்தையும் உணராது மரக்கறி பதார்த்தம் மட்டும் புசித்துக் கொண்டு தன்னை சைவனென்றும், ஜீவகாருண்யமுள்ளவனெனென்று சொல்லிக்கொண்டு மாமிச பதார்த்தம் புசிப்பவர்களை தூற்றுகிறவர்கள் ஸ்தூல நினைப்பின் வலிமையால் ஜீவத்தன்மையை உணர சந்தர்ப்பமற்றவர்களாகி விடுகிறார்கள். ஆகையால் புத்தியின் வாயிலாக தெளிந்த முறையில் அந்தர்முக விசாரணை செய்தால் மட்டுமே சாந்தத்தன்மையோடு கூடிய சைவாம்சத்தையும் ஜீவகாருண்யத்தின் ரகசியத்தையும் கடவுளின் உண்மை தத்துவத்தையும் உணர முடியுமேயல்லாது மற்றபடி ஆகாராதிகளோடு கூடிய கருமானுஷ்டானங்களினால் எவனும் ஜீவகாருண்யத்தின் லட்சணத்தையோ சைவாம்சத்தின் உண்மையையோ கடவுளின் எதார்த்தத்தையோ உணர இயலாது.

46. எப்படி தனக்கிச்சையுற்ற யெளவன ஸ்திரீயுடன் சம்பந்தப்பட்டிருக்கிற புருஷன் சம்பந்தப்பட்டிருக்கிற போது

மற்ற எந்த ஞாபகமும் அற்றவனாக இருக்கிறானோ அப்படியே எப்பொழுது புருஷன் நித்திரை செய்கின்றானோ அப்போது சத்சொரூபமான ஆத்மாவுடன் ஏகமாய் விடுகிறான். அவ்வாறு ஏகமான நிலைமையில் பிதா பிதாவாகாதுபோகிறான் மாதா மாதாவாகாது போகிறாள். திருடன் திருடனாகாது போகிறான். வைஷ்ணவன் வைஷ்ணவனாகாது போகிறான். சைவனும் சைவனாகாது போகிறான். முஸ்லீம் முஸ்லீமாகாது போகிறான். உலகை ஆட்சிபுரியும் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தியாகாது போகிறான். சன்யாசி சன்னியாசியாகாது போகிறான். தபசி தபசியாகாது போகிறான். உத்தியோகஸ்தன் உத்தியோகஸ்தனாகாது அவ்வித சுழித்தியில் (நித்திரையில்) புண்ணிய சம்பந்தமற்றவனாகவும் பாப சம்பந்தமற்றவனாகவும் ஆகிவிடுகிறான். மனத்தின் சம்மந்தமான சகல சோகங்களையும் கடந்துவிடுகிறான். சகல வஸ்துக்களிலும் தத்சொரூபமாய் வியாபித்துள்ள ஆத்ம சொரூபமாகிய அவனே இயந்திரத்தாலாகிய சரீர அந்தக்கரணங்களில் பகிர்முகப்பார்வையில் பிரதிபிம்பித்த போது விழிப்படைவதாக கற்பிதத்தில் சங்கற்பித்து விழிப்படைகிறான். கற்பித விழிப்படைந்ததும் மாயா சம்மந்த மறைப்பினால் வியஷ்ட்டி (வெவ்வேறான) நிலையெய்து ஒருவன் நான் அவனுக்கு தகப்பனென்கிறான். ஒருவன் இவள் எனது தாய் என்கிறான், ஒருவன் சைவனென்கிறான், ஒருவன் வைஷ்ணவனென்கிறான், ஒருவன் முஸ்லீமென்கிறான், ஒருவன் கிருஸ்தவனென்கிறான், ஒருவன் தன்னையே பெரிய தனவந்தனென்றெல்லாம் பிதற்றுகிறான்.

47. ஜலமானது தாகத்தை தணிக்கக்கூடியதாயிருக்கும் போது இன்ன பாத்திரத்தில்தான் அந்த ஜலத்தை உட்கொள்ள வேண்டுமென்று நியதியில்லை. உணவானது பசிப்பிணியை நிவர்த்தி செய்யக்கூடியதாயிருக்க இன்னார்தான் அந்த உணவை பரிமாரவேண்டுமென்று நியதியில்லை. அதுபோல் ஓ மனிதனே உனக்கு உண்மையாக கடவுளை உணரவேண்டுமென்று தாகமிருந்தால் இன்ன குலத்தவன்தான் கடவுளைப்பற்றிய ஞானத்தை புகட்ட வேண்டுமென்று நியதி இருக்கிறதா ? அல்லது இன்ன நிறத்தவன்தான் போதிக்க

வேண்டுமென்று நியதியிருக்கிறதா ? ஆகவே நீ இன்ன குலம் இன்ன நிறமென்று சரீரத்தில் உன் பார்வையை செலுத் தாதே. எவனாக இருப்பினும் சரியே உண்மை ஞானப் பிரகாசம் இருந்திடில் உடனே அவனே சற்குருவாக ஏற்றுக்கொள். அப்பொழுது நீ கடவுளை உண்மையாக உணர்ந்து ஜீவன் முக்தனாகலாம்.

48. பிர்ம அனுபவமே ஜீவன் முக்தி நூல்களை கற்பதால் மட்டும் எவனும் சுயானுபூதியாக முடியாது. வேத சாஸ்தி ராதி இதிகாச புராணங்களில் எத்தகைய பாண்டித்யமடைந் தாலும் அனுபவ பூர்வமாக அகண்ட பிர்மத்தை உணர்ந்தா லல்லாது பிர்ம நிலைக்குறிய ஆனந்தம் கைவல்யமாகமாட் டாது.

49. மூன்று குண உபாசனைகளையும் கடந்து விசாரணை யின் மூலியமாக பிர்மஞானமடைய மேல்நோக்கி செல் பவனே உண்மை ஞானத்தின் தத்துவத்தை உணர உத்தம அதிகாரியாகிறான். ஆடம்பரமில்லாமலும், கர்வமில்லாமலும் தனது ஹிருதய ஆழத்திலிருந்து கடவுளை பஜிப்பது சாத்வீக உபாசனையாகும். கடவுளை பூஜிக்கும்போது வீட்டையோ அல் லது ஆலயங்களையோ அலங்கரித்து விக்ரஹங்களை தேரிலோ சப்பரங்களிலோ ஆரோகணிக்க செய்வித்து சங்கீத மேள வாத்தியங்களுடனே ஆடம்பரம் செய்து பூஜிப்பது ராக்ஷஸ உபாசனையாகும். ஈஸ்வர பூஜை செய்யும்போது நூற்றுக் கணக்கான ஆடுகளையும் கோழிகளையும் பலி கொடுத்து மது மாம்சாதிகளை நைவேத்தியத்திற்கு வைத்து ஆடிப்பாடி ஆராதனை செய்வது தாமத உபாசனையாகும்.

50. நித்திய அனித்திய வஸ்து விவேகமில்லாதவனும் இகலோக பரலோக போகங்களிடத்து ஆசையுள்ளவனும் விரக்தியடையாத மனத்தையுடையவனும் எவனோ அவ னுக்கே கர்மம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆத்ம ஞானிகளுக் கல்ல.

ஞானசேகரம்

ஸ்ரீஜத் கிணகர் சுவாமிகள்

அருளிய

ஆத்ம ஞான கீதம்.

மயில்வாகனமேரிவா முருகா என்ற மெட்டு.
ஆதிதாளம்.

கனவே மனிதனிடம்
காண்பது முழுவதும் பகற் (கன)

(மகுடங்கள்.)

கவருவம் பொருள் மமதையும் மறைபடும் பகற் (க)

காவடி கொண்டு சதா ஷண்முகன் திரு
சேவடி கண்டுநி தானந்தொழுவதும் (க)

காசிபோன்ற பல தலங்களில் மூழ்குவது
தோஷம் நீங்கிசுக பலனடைவதென்பது (க)

காணுதொருவரும் பூமியுள் சமாதி
வாணுள் முழுவதும் உயிருடன் அமரினும் (க)

காதிற்குண்டலம் காயா சம்பல
வாகிற்கொண்டு கமண்டலம் கையுற
கடவுட் கிருபையை கண்டுகொண்டோமென
தடையுட்பட மனம் நின்று நினைப்பது (க)

கடந்த உண்மைகள் கமழ்பெற இலங்கிடும்
படர்ந்த சுருதிகள் பரிவுடனுணரினும் (க)

காத்திலே ஜபமாலை கொண்டு தினமும்
புறத்திலே ஜபம் சாலபண்டு புரியினும் (க)

காடே கதியென்றுயர்தவம் புரியினும்
பாடே பதியும் பலநிலை சிறிதேனும் (க)

கங்குல்பகலும் சாயா தரிசனை கண்டு
எங்குமகிழ மாயாசெயல் புரியினும் (க)

கட்டைபோல் சரீரம் ஜலத்தின்மேல்
மட்டமாய் கிடக்க நிட்டையில் கூடினும் (க)

கரு திடரே சகபூரக கும்பகநிலை
கலைந்திடா அடயோக சாதனம்
காலமனைத்தினும் மேல பழகினும் (க)

காணயோக சார்பில் சிரகிரியில்
வேண நாதகீதங்கள் கேட்பினும் (க)

கதியென ஆராதார தரிசனைகள்
கண்டுமயங்கி மருண்டு இருந்திடல் (க)

கூர்மையான நினைவோடு புருவநடு
நேர்மையான இடமீதிலுருவ மிடு
ஜோதி தரிசனம் கண்டது கடவுளென்
பேதமுற தினம் நின்றிடல் தடையுள (க)

குண்டலி எழும்ப சிறகிரி அமிர்தத்தை
உண்டக மகிழ்ச்சி உகந்திட அடையினும் (க)

கூடுவிட்டு கூடுபாயும் தேடரிய சித்திகளை
பாடுபட்டு நாடிநித்தம் பாரில் விளையாடிடினும் (க)

குந்தகமிருந்த தமமந்த மதியுள்ளவர்க்கு
முந்தபிர்ம ஞானத்தை முழங்க உபதேசிப்பது (க)

கோரிதமக்குப் பிரதி பிரயோஜனத்தைக்கருதி
வரிட கடவுளின் உபகாரத்தை இச்சிப்பது (க)

கண்டமில்லாத அகண்டமதாகிய
காரணசிதா காயநாயகன்
வேறென உணராது தானென
கண்டிடாததால் மண்டிடும் மாய்கையின் (க)

கதித்த செந்தமிழ் கிணகர் சுவாமிகளின்
பதித்த மந்திர பரமஞானமொழி
தனைபண்போடு பகுந்தறிந்திடாத மதி
இனையின் பொடுமெய்யேன் றிருப்பதினுவுள (க)

பால ராமனய்யனே என்ற மேட்டு.

(தாளம் ரூபகம்.)

பல்லவி.

சாகும் சரீரம் மிதை—பெற்று
சந்தோஷமேபெரும் அந்தகனேவெரும் (சா)

சரணு பல்லவி.

கூஹூ—வென்றுற்றார்குழம அழுகவே
கொண்டமனைவி அலரி விழுகவே
மோகமிகும் பொருள்யாவும் முழுகவே
மூங்கிலில் நால்வர் தோழ்தாங்க நழுகவே (சா)

பல்லவி எடுப்பு.

ஆகையினாலே வாழ்வே—பொய்மை
யாகும் தெய்வீகமெய் அம்சமாகுவாயே (சா)

மாய்கையின் தோற்ற மாணமொன்றில்லை
மங்காத பிர்மம் நாமென்ற ஓர் எல்லை
தூயநிலையுணர்ந்தாலில்லைதொல்லை
துணிபுர நீயிதை கவனிய வேரில்லை (சா)

பல்லவி எடுப்பு.

சற்குருமார்களையே —கண்டு
சாகாத ஒன்றெதுவென்ற பொருளையே (சா)

நற்குணமாக நயந்திடகூர்ந்து
நாற்ற சரீரம் நானல்லவென்பேர்ந்து
விற்பனமாம் சிதா காயத்தைச் சார்ந்து
வீட்சண்ய ஞானமிலா திளைந்தாழ்ந்து (சா)

பல்லவி எடுப்பு

சுபகிணகர் சுவாமிகள்— ஆத்ம
சோபித போத மெஞ்ஞான சங்கீத சொல் (சா)

அபலை பிறவிய கன்று அதீத
ஆனந்தமேபிர்மமாகிடும் வேத
தவவிரத சாட்சாத் கார அபேத
தாரகநேர்வழியே துடர்வாய் மித (சா)

Printed at the Mirasdars' Welfare Press, Mayavaram.
581 — 10-7-38. 2000.

JAYASEELAN PRESS,

FINE ART PRINTERS, PUBLISHERS & BOOKBINDERS,

SOUTH MAIN ST., TIRUVARUR.

ஜெயசீலன் பிரஸ்,

கலர் ஆர்ட் பிரிண்டர்ஸ், பப்ளிஷர்ஸ் அண்டு

புக் பைண்டர்ஸ்,

தெற்குவீதி, திருவாரூர்.

இந்த அச்சியந்திரசாலையில் அச்சுவேலை சம்பந்தமான கல்யாணப்பத்திரிகைகள், புக் பாரம் முதலிய இங்கிலீஷ், தமிழ் எல்லா வேலைகளும் கலர் வேலைகளும், காலண்டர் வேலைகளும், பைண்டிங் சம்பந்தமான ரூலிங் குறிப்பு, பேரேடு, லா புக்ஸ் முதலிய பைண்டிங் வேலைகளும், குறித்த டயத்தில் குறைந்த சார்ஜுக்கு திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும்.

V. ஜெயராமன்,

புரொப்ரைட்டர்.